செ.வெ.எண்: 26 நாள்:09.08.2016

## புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுவரை பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்கு புதிய பேருந்து வழித்தடங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் சார்பில் பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்கு புதிய பேருந்து வழித்தடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த புதிய பேருந்து வழித்தடங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள்.




இதன்படி தமிழகஅரசு பேருந்து வசதி இல்லாத அனைத்து பகுதிகளுக்கும் புதிய பேருந்து வசதியினை ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், ஊரணிக்களம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், சாத்திவயல், ஆம்பூர்பட்டி போன்ற இதுவரை பேருந்துவசதி இல்லாத கிராமங்களுக்கு புதிய பேருந்து வழித்தடம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் இதில் ஒரு பேருந்து உடையாம்பட்டியிலிருந்து காலை 10.05 மணிக்கு புறப்பட்டு தொட்டியப்பட்டி, குப்பத்துப்பட்டி, ஊரணிக்களம் விளக்கு வழியாக ஊரணிக்களத்தை சென்றடையும். மீண்டும் இப்பேருந்து ஊரணிக்களத்திலிருந்து காலை 10.20 மணிக்கு புறப்பட்டு ஊரணிக்களம் விளக்கு, வாதிரிப்பட்டி, காலாடிப்பட்டி சத்திரம், அன்னவாசல், சித்தன்னவாசல், இரும்பாளி, மருதாந்தலை, முத்துடையான்பட்டி, திருக்கோகர்ணம் வழியாக புதுக்கோட்டையை சென்றடையும்.

மற்றொரு பேருந்து திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து காலை 7.55 மணிக்கு புறப்பட்டு விமானநிலையம், ஆவூர்ரோடு, சஞ்சீவிராயர் கோவில், ஆவூர், ஆம்பூர்பட்டி நாலு ரோடு வழியாக ஆம்பூர்பட்டி மற்றும் சாத்திவயலை சென்றடையும். மீண்டும் இப்பேருந்து சாத்திவயலிலிருந்து காலை 8.45 மணிக்கு புறப்பட்டு பேராம்பூர், கல்லுப்பட்டி, மலம்பட்டி மற்றும் மேற்கண்ட வழித்தடங்கள் வழியாக திருச்சி மத்திய பேருந்து நிலையத்தை சென்றடையும். மேலும் இப்பேருந்து திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து மாலை 4.40 மணிக்கு புறப்பட்டு மேற்கண்ட வழித்தடங்கள் வழியாக சாத்திவயலை சென்றடைவதுடன் மீண்டும் இப்பேருந்து சாத்திவயலிலிருந்து மாலை 5.40 மணிக்கு புறப்பட்டு மேற்கண்ட வழித்தடங்கள் வழியாக திருச்சி மத்திய பேருந்து நிலையத்தை சென்றடையும்.

இதன் மூலம் இப்பகுதியை சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், வியாபாரிகள், பொதுமக்கள் போன்ற அனைத்து தரப்பினரும் மிகுந்த பயன்பெறுவார்கள். மேலும் இப்பகுதி பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்டங்களை பெறும் பொதுமக்கள் இதனை உரிய முறையில் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக புதுக்கோட்டை மண்டல வணிக மேலாளர் திரு.வரிசைமுகம்மது, ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.திருமூர்த்தி, ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், ஊராட்சி மன்றத்தலைவர்கள் திரு.ராமசாமி, திரு.குருமூர்த்தி, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.பாலமுருகன், திரு.ரவி, திரு.குண்டுமழவரார், கிளை மேலாளர் (திருச்சி) திரு.தங்கராஜ், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**